## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

04.03.2018 தவக்காலம் 3ஆம் ஞாயிறு - திருப்பலி 02

07.03.2018 தூய பெர்பேத்துவா - பெலிசித்தா - திருப்பலி 03

08.03.2018 தூய இறையோவான் - திருப்பலி 04

11.03.2018 தவக்காலம் 4ஆம் ஞாயிறு - திருப்பலி 05

17.03.2018 தூய பேட்ரிக் - திருப்பலி 06

18.03.2018 தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு - திருப்பலி 08

19.03.2018 தூய வளனார் (யோசேப்பு) பெருவிழா - திருப்பலி 09

25.03.2018 குருத்து ஞாயிறு - திருப்பலி 10

29.03.2018 பெரிய வியாழன் - திருப்பலி 12

30.03.2018 பெரிய வெள்ளி - சிலுவைப் பாதை 13

01.04.2018 உயிர்ப்பு ஞாயிறு - திருப்பலி 22

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

தூய யோசேப்பு வழிகாட்டும் நீதிமான் 23

தூய வெள்ளி நம்மைத் தூய்மையாக்கும் வெள்ளி 24

திருச்சபை செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

### 04.03.2018 தவக்கால மூன்றாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. வி.ப. 20:1-17 II. 1கொரி.1:22-25 யோவான் 2: 13-25

இறையேசுவில் பிரியமான மக்களே, இன்றைய தினம் நம் திருஅவை தவக்கால மூன்றாம் ஞாயிற்றைச் சிறப்பிக்கின்றது. இத்தவக்காலத்தைத் தூய்மையுடன் அனுசரிக்க இறைவன் நம்மைத் தூண்டுகிறார். கடவுளின் கட்டளைகளை மதிக்கவும், அவற்றின்படி வாழவும், அதனால் நாமும், நம் சந்ததியினரும் எவ்வித சாபக்கேட்டிலும் விழாதவாறு காத்துக் கொள்ளவும், ஓய்வு நாளைத் தூய்மையாகக் கடைப்பிடிக்கவும் வழிகாட்டுகிறார். ஏனெனில் கடவுள் வல்லமையும், ஞானமுமாய் இருக்கிறார். "மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானம் மிக்கது என்றும், மனித வலிமையை விட அவருடைய வலுவின்மை வலிமை மிக்கது" (1கொரி. 1:22-25) என்றும் கூறுகிறார். இன்றைய யோவான் நற்செய்தியில் ஆலயத்தை மாசுப்படுத்துவோரை அடையாளம் கண்டு கயிறுகளால் சாட்டைப் பிண்ணி விரட்டியடிக்கிறார்.

இயேசுவின் உரிமைப்பற்றி யூதர்கள் வினா எழுப்ப "இக்கோவிலை இடித்தால் மூன்று நாளில் கட்டியெழுப்புவேன்" என்றுரைக்கிறார். யூதர்களின் கேள்வியில், தன்னை கோவிலாக்கி, தான் உயிர்க்கும் அந்த மூன்றாம் நாளை அவர் அடையாளம் காட்டுகிறார். தன்னைத் தூய்மையான ஆலயம் என்பதை எடுத்துக்காட்டிய அவர், அங்கு நடக்கும் வியாபார நிலையையும், பணி மாற்று பட்டுவாடாவையும், ஏழைகளின் காணிக்கைத் தரமற்றது என்று நிராகரிக்கப்பட்டு, ஆலயத்திலிருந்து அதிக விலைக்கொடுத்து வாங்கும் நிர்பந்தமான ஏமாற்று நிலையையும், கண்டு வெகுண்டெழுந்த இயேசு, தாமே விரட்டியடிக்கும் நிலைக்குச் செல்கிறார். அன்பும், தர்மமும், தூய்மையும் கொண்டதுதான் ஆலயம். நம் உள்ளமாகிய ஆலயத்தை அவ்வாறே பேணிக்காக்க வேண்டுமென்றே இயேசு விரும்புகிறார். இதைத்தான் இன்றைய வாசகங்கள் உணர்த்துகின்றன. இவற்றை முழுமையாக உள்வாங்கி இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையே உருவான இறைவா, திருஅவையின் தலையான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவரும் இயேசுவின் போதனைகளைக் கடைப்பிடித்து மற்றவர்களுக்கும் அதைப் போதித்துத் தொடர்ந்து தூய வாழ்வில் நிறைவடைந்து, விண்ணகம் சேர உம்மை மன்றாடுகிறோம்.
2. தூய ஆலயமே இறைவா, "உனக்குக் கர்த்தாவான இறைவன் நாமே, நம்மைத் தவிர வேறொரு இறைவன் உனக்கில்லை" என்று கட்டளைப் பிறப்பித்த நம் கடவுளின் ஆதங்கத்தையும், நம் உள்ளமே அவர் வாழும் ஆலயம் என உறுதியாகக் கூறும் மனப்பாங்கையும் பின்பற்றி நாங்கள் வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நலம் காக்கும் இறைவா, இன்றைய ஆட்சியாளர்களின் திறனற்ற ஆட்சியால் ஏழைகள் மேலும் கடனாளிகளாக மாறுவதும், பணம் படைத்தவர்கள் மேன்மேலும் ஏற்றம் பெறுவதுமான சூழ்நிலையில், ஏழை, எளியோர்மேல் பரிவு கொண்டு இந்நிலையை மாற்றியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. மீட்பரே இறைவா, உண்மையான கிறிஸ்துவத்தின் ஆவிக்குரிய அடையாளங்களை இந்திய திருச்சபையும், பல இயக்கங்களும் இழந்துவிட்ட நிலையில், உம் இரட்சிப்பில் வாழும் அனைவரும் உம் பரிசுத்த ஆலயங்களாக வாழத் தேவையான தியானங்களும், செபவழிபாடுகளும் கிடைத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

### 07.03.2018 தூய பெர்பெத்துவா - பெலிசித்தா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறைஇயேசுவின் அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது தூய பெர்ப்பெத்துவா மற்றும் பெலிசித்தா ஆகியோரின் விழாவைக் கொண்டாடுகிறது. "விசுவாசத்தில் ஊன்றி நில்லுங்கள், ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்" என்று இறப்பதற்கு தமது கடைசி வார்த்தையாக சொன்னவர் பெர்ப்பெத்துவா. 203ம் ஆண்டு செப்திமுஸ் கிறிஸ்துவர்களைக் கொன்றழித்த காலத்தில் பெர்ப்பெத்துவா ஃபெலிசித்தா மற்றும் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். பெலிசித்தா 8மாத கர்ப்பிணி.

நாட்கள் கடந்தது, பிரசவ வலியால் துடித்தார். "இதற்கே அழுகிறாயே விலங்குகள் உன்னைக் கடித்து கிழிக்கப்போகிறதே என்ன செய்வாய்?" என்று அங்குள்ள காவலன் கேட்டதற்கு, "இப்போது நான் தனியாக துன்பப்படுகிறேன். அங்கே என்னோடு இறைவனும் இருப்பார். ஏனென்றால் நான் அவருக்காகவே துன்பப்படுகிறேன்" என்றார். அனைவரையும் விலங்குகளுக்கு பலியாக்கினர். விலங்குகளின் பசி அடங்கியது ஆனால் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை அடங்காமல் எழும்பியது. ஆரம்பக் காலங்களில் தூய பெர்ப்பெத்துவா மற்றும் ஃபெலிசித்தாவின் மறைசாட்சியம் திருவழிபாடுகளில் முக்கிய இடம் பெற்றது.

இன்றைய நற்செய்திக்கும் இவர்களது வாழ்விற்கும் ஒற்றுமை இருப்பதைகாணலாம். ஆகவேஇறைவார்த்தையை அறிவிக்கிறவர்களைவிட அதன்படி வாழ்ந்து அறிவிப்பவர்களே சிறந்தவர்கள் அவர்கள் தான் புனிதர்கள். இத்தவக்காலத்தில் நாமும் இறைவார்த்தையை நம் வாழ்வாக்க முயல்வோம். இறைவார்த்தையின் படி வாழ்வதே மிகப்பெரிய நற்செய்தி அறிவிப்பு என்பதை இவ்விரு புனிதர்களின் வழியாக உணர்வோம் தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் ஆகியோர் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும், சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வு தரும் வார்த்தையான இறைவா, "விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும், என் வார்த்தைகள் மாறாது" என்று மொழிந்தீரே, உமது வார்த்தைகளை நாங்கள் ஆர்வத்தோடு கடைப்பிடிக்கும் அருளைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
3. கொடைகளின் நாயகனே இறைவா, நீர் எமக்களித்திருக்கின்ற கட்டளைகளை முழுமனதோடு ஏற்று அவற்றின்படி வாழவும், அவ்வாறு வாழ்வதைப் பிறருக்கு அறிவிக்கவும் வேண்டிய பேற்றினைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. எங்கள் தலத் திருச்சபையிலுள்ள ஏழை, அநாதைகள், நோயுற்றோர், கைவிடப்பட்டோர் ஆகியோர்களுக்கு உமது இரக்கத்தையும், கருணையையும் வெளிப்படுத்தும் அன்புக் கருவிகளாக நாங்கள் வாழ வருமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 08.03.2018 தூய இறையோவான் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இன்று திருஅவையானது தூய இறை யோவான் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. தூய இறை யோவான் போர்த்துக்கல் நாட்டில் மார்ச் மாதம் 8ம் நாள் 1495ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஸ்பெயின் நாட்டுக்கு ஓடிப்போய் ஒரு பணக்காரரிடம் வேலைக்கு அமர்ந்து அவரது ஆடு, மாடுகளை மேய்த்து வந்தார். முத்திப்பேறு பெற்ற அவிலா அருளப்பரின் மறையுரைகளும், வாழ்வும் இவரது மனதில் தாக்கத்தை ஏற்படுத்த, அவர் மனமாற்றம் அடைந்தார். தம் உடமைகளையெல்லாம் விற்று நோயாளிகளுக்குக் கொடுத்தார். பிறரால் தாழ்த்தப்பட விரும்பினார். அதற்காகச் சிறிது காலம் பைத்திக்காரனாகவும் நடித்தார். பின்பு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, அங்கு நோயாளிகளைக் கண்காணித்து அவர்களில் இயேசுவைக் கண்டார்.

ஒரு நாள் இவர் நோயாளிகளுக்குச் சேவைச் செய்கையில் ஓர் அற்புதக்குரல் கேட்டது. "அருளப்பா, என் பெயரால் ஏழைகளுக்குச் செய்வது அனைத்தையும் எனக்கேச் செய்கிறாய், நீ ஏழைகளுக்குக் கொடுப்பதை நான் பெற்றுக்கொள்கிறேன்", "எனக்கே உடையளிக்கிறாய், என் பாதங்களையே கழுவுகிறாய்" என்று அந்தக் குரல் கூறியது. இவர் மார்ச் 8ம் நாள் 1550ம் ஆண்டு பீடத்தின் முன் முழங்காலில் நின்று செபித்துக்கொண்டிருக்கும்பொது, இறைவனின் காலடிகளைப் பற்றிக்கொண்டார். இந்தப் புனிதர் புத்தகம் விற்பனை செய்பவர்கள், புத்தகம் அச்சிடுபவர்கள், இருதய நோயாளிகள், மருத்துவமனைகள், செவிலியர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், தீயணைப்பு வீரர்கள் ஆகியோரின் பாதுகாவலராவார். நமது அன்றாட நிகழ்வுகளில் நமக்கு உதவியாக இருக்கும், செவிலியர்கள், தீயணைப்பு வீரர்கள், மருத்துவமனை ஊழியர்கள் இவர்களின் நலன்களுக்காக செபித்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.





## விசுவாசிகளின் மன்றாட்டு

1. இறைவார்த்தையில் எங்களை வளப்படுத்தும் இறைவா, நற்செய்திப் பணியாற்றும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், இயேசுவின் நம்பிக்கையாளர்கள் ஆகியோருக்கு நீர் வழங்கிய கொடைகளைக் கடவுளுக்காகப் பயன்படுத்தி, தூய்மையான வாழ்வு வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. குணமளிக்கும் இறைவா, உமது புனிதர் இறை யோவானின் திருவிழாவைக் கொண்டாடும் நாங்கள் புனிதரின் வழியில் இல்லங்களிலும், மருத்துவமனைகளிலும் நோய்வாய்ப்பட்டிருப்பவர்களை நேரில் சென்று பார்த்து, அருகிலிருந்து அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகள் கூறவும் பணிகள் மூலம் அந்த மக்கள் நற்சுகம் பெறவும் உழைக்க மனமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. "சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்" என்ற அன்பு தெய்வமே, இதோ எம் பிள்ளைகளை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களை ஆசீர்வதியும், அவர்கள் போதுமான ஞானத்தோடு வளரவும் உடல் நலத்துடன் வாழவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. உமது அன்புத்தாயை எங்களுக்கு தாயாக தந்த இறைவா, இன்று உலக மகளிர் தினத்தைக் கொண்டாடும் அனைத்து மகளிரையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். மகளிர் அனைவரும் பெண்ணடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு சமத்துவமான வாழ்க்கை வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 11.03.2018 தவக்காலம் நான்காம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. குறி. 36: 14-16,19-23 II. எபே. 2: 4-10 யோவா: 3: 14-21

"உன்னை நான் நினையாவிடில் என் நா மேல்வாயோடு ஒட்டிக் கொள்வதாக" நம்மில் வேரூன்றிக்கிடக்கும் நம்மைக் கீழே வீழ்த்திக் கிடக்கும், சுயநலம், பாவம், பொறாமை மற்றும் பகைமை போன்ற அழுக்குகளை அப்புறப்படுத்தி நம் ஒவ்வொருவரையும் தூய்மைப்படுத்தும் ஒரு அற்புதமான வாய்ப்பு இத்தவக்காலம். இறைவன் பாவிகளை வெறுப்பதில்லை, மாறாக பாவத்தைத் தான் வெறுக்கின்றார்.

நொறுங்கிய இதயத்துடன் வருபவர்களை ஏற்றுக்கொள்கிறார். "கடவுள் நம்மீது எவ்வாறு அன்பு கூர்ந்தார் என்றால் தம் மகனை நம்பிய எவரும் அழியாமல் நிலைவாழ்வைப் பெறும் பொருட்டு அந்த ஒரே மகனையே நமக்காக பலியாக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்."

திருச்சபையானது புனிதர்களின் அடைக்கலம் மட்டுமன்று, மனந்திரும்பி வரும் பாவிகளையும் ஏற்று குணமளிக்கும் ஒரு மருத்துவமனை என்பதினையும் நம் நினைவில் கொள்வோம். எனவே நாம் இருளாகிய சாத்தானை வென்று, ஒளியின் மக்களாக மாறி, தீய நாட்டங்களைக் களைந்து, இயேசுவின் பாதையில் செல்ல நல்ல திடமனதினைத் தரும்படி இத்திருப்பலியில் வேண்டுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. வழிநடத்தும் தந்தையே இறைவா, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் உமது சித்தத்தின்படி நெறிதவறாது, வழிநடத்திட அவர்களுக்குத் திடமனத்தையும் ஆற்றலையும் கொடுத்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் தந்தையே இறைவா, எம் நாட்டை ஆளும் தலைவர்களுக்கு நல்ல தெளிவான ஞானத்தைக் கொடுத்து, பசி, பஞ்சம், பிணி, வறுமை என்னும் தீயோனை விரட்டி, நீதி, நேர்மை, என்னும் நல்லாட்சியைச் செய்ய, தியாக மனதினைத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. ஒளியின் தந்தையே இறைவா, உம்மைவிட்டு ஒவ்வொரு நாளும் பலவழிகளில் சென்று, கெட்டு சீரழிந்துக் கொண்டிருக்கும் எம் இளைஞர்களைக் கண்ணோக்கும். அவர்கள் மீண்டும் உம்மை நோக்கி திரும்பி வர நல்ல மனமாற்றத்தைத் தந்து காத்து வழிடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.

4. மனிதரால் புறக்கணிக்கப்பட்ட இயேசுவே உம்மை அறியாத மக்களால் நாங்கள் புறக்கனிக்கப்படும் போது அவர்களை வெறுக்காமல் அவர்களுக்காக மன்றாடும் மனதை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

## 17.03.2018 தூய பேட்ரிக் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இன்று நம் திருஅவையானது தூய பேட்ரிக் நினைவு நாளைச் சிறப்பிக்கின்றது. இலத்தீன் ஐரிஷ் குடிமகனான இவர் கி.பி. 387-493 வரை காலங்களில் வாழ்ந்தவர். தன் வீட்டில் இருந்த போது பதினாறு வயதில் ஐரிஷ் கடற்கொள்ளையர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டு நீண்டதூரம் கப்பலில் கொண்டு போகப்பட்டு ஆறு வருடங்களாக ஆடுகளை மேய்க்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார். உறக்கத்தில் அவருக்கு கடவுளின் தூதர் முதல் முறையாகக் காட்சியளித்து வீட்டிற்குத் தப்பித்துப் போக கூறினார். தூய பேட்ரிக் ஒரு கப்பல் மாலுமியின் தயவால் தப்பித்து வீடு போய் சேர்ந்தார். வீட்டில் உறங்குகையில் கடவுளின் தூதர் இரண்டாவது முறையாக காட்சியளித்து கடவுள் அழைப்பதாகக் கூறிச் சென்றார்.





அதற்குபின் தூய பேட்ரிக் துறவற மடத்தில் சேர்ந்து பயின்று குருப்பட்டம் பெற்று அரிய சேவைகளைச் செய்து வந்தார். இவரின் சேவையைப் பாராட்டி அன்றைய திருத்தந்தை முதலாம் செலஸ்தின் அவரை அயர்லாந்து மக்களை மனந்திருப்பும் அரிய சேவையைச் செய்யப் பணித்தார். இதைக் கண்ட அந்நாட்டு அரசன் புனிதரைப் பிடித்து வரச் செய்தான். புனிதர் தம் தோழர்களான புனித பிரிஜித், புனித கொலும்பா ஆகியோருடன் அரசன் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

புனிதர் பேட்ரிக் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பற்றி அழகாக எடுத்துரைத்தும், ஒரே கடவுள் மூன்று ஆட்களாக இருக்கிறார் என விளக்கியும் வந்தார். அரசனால் இதைப்புரிந்து கொள்ள இயலாததால் அங்கிருந்த "சாம்ராக்" என்னும் ஒரு சிறு செடியைப் பரித்து அதன் ஒரே தண்டில் ஒரே இலை 3 பிரிவுகளாக இருப்பதை சுட்டிக்காட்டினார். இதுபோல்தான் கடவுளும் மூன்று ஆட்களாயிருக்கிறார் என்பதையும் விளக்கினார். அரசன் புரிந்துக்கொண்டு தன் மக்களோடு கிறிஸ்துவத்தில் இணைய அயர்லாந்தில் பெரும்பாலானோர் மனந்திரும்பினர். மக்கள் இவரை அயர்லாந்தின் அப்போஸ்தலர் என அழைத்தனர். இப்புனிதரைப்போலவே, நமக்கும் இயேசுவின் நற்செய்தியைப் பிறருக்கு அறிவிக்க வேண்டிய கடமை உள்ளது என உணர்ந்து இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, திருஅவையின் ஆளுனரான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியினர், பொதுநிலையினர் அனைவரும் தமக்களிக்கப்பட்ட கடமைகளை, கட்டளைகளை, போதனைகளை, நன்கு செயலாற்ற உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் இறைவா, இன்றைய சமுதாயத்தின் மிகப் பெரிய அவமானமும், அதிபயங்கரமான அபாய சின்னமுமான "காதல்" என்னும் அரக்கனின் பிடியிலிருந்து எம் இளைஞர்களைக் காப்பாற்றியும், அதன் தோல்வியினால் தற்கொலை என்னும் மாயையில் சிக்கி மாய்ந்து போகாமல், பெற்று வளர்த்த தாய் தந்தையருக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தாத அறிவுசார் பிள்ளைகளாக வாழ வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆற்றலின் இறைவா, இப்பூவுலகில் வாழும் அனைத்து மக்களும், கிறிஸ்துவத்தின் மேன்மையையும், சத்தியத்தையும் உணர தன் செபதப செயல்களாலும், உறுதியான விசுவாசத்தாலும் தான் வாழ்ந்த

அயர்லாந்து நகரம் முழுவதிலும் கிறிஸ்துவத்தை விதைத்து அனைவரும் சத்திய சன்மார்க்கத்தைப் பின்பற்றச் செய்த தூய பேட்ரிக் போன்று அநேக தூயவர்களை அருள உம்மை மன்றாடுகிறோம்.

## 18.03.2018 தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எரே. 31: 31-34 II.எபி. 5: 7-9 யோவா: 12: 20-33

இன்று தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலியைச் சிறப்பிக்க நாம் ஒன்று கூடியுள்ளோம். இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் இஸ்ரயேல் மக்களோடு செய்துக்கொண்ட உடன்படிக்கையை இதயத்தில் எழுதுகிறார். இதயம் மனித உயிரின் அன்பின் அடையாளம். அது உள்ளத்தில் எழுதப்படுவதால் மனிதருள் ஒன்றித்து விடுகிறது. அதனால் நாம் உடன்படிக்கையை அன்பினால் கடைப்பிடிக்க வேண்டுமென்கிறார். இரண்டாம் வாசகத்தில் "உரத்த குரல் எழுப்பி கண்ணீர் சிந்தி, கெத்சமணித் தோட்டத்தில் செபித்த காட்சியை நினைவுக்குக் கொண்டு வருகிறது. ஒடுக்கப்பட்ட மக்களாகிய நமக்காகத் துன்புறும் இயேசு மன்றாடுகிறார்.

யோவான் நற்செய்தியிலிருந்து அருள்வாக்கு முழங்கப்படுகிறது. தாம் துன்புற்று இறந்தால்தான் மக்கள் வாழ்வு பெறுவர் என்று இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறு மடிவதற்கான நேரம் நெருங்கிவிட்டது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். எனவேதான் கோதுமைமணி பற்றிய உருக்கமான கூற்று வழியாக தமக்கு நிகழவிருக்கும் சாவு-மாட்சி பற்றி இயேசு கூறுகிறார். பிறர் நலம்பேணும் இயேசுவின் பணியாளர்களின் சிறு செயலுக்கும் தந்தைக் கடவுளின் சன்மானமான இதய மகிழ்வும், இவ்வுலகம் தரமுடியாத சமாதானமும், திருப்தியும் கிடைக்கும். கோதுமை மணியைப்போல நம்மை இழந்து பிறருக்காகப் பணியாற்ற அழைக்கும் ஆண்டவரின் அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து இத்திருப்பலியில் பங்குகொள்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எங்களைப் புனித வாழ்விற்கு அழைக்கும் இறைவா, எங்களைப் புனிதத்தில் வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், அவருடன் இணைந்து பணியாற்றும் ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், துறவியர், கிறிஸ்துவின் நம்பிக்கையாளர்கள் அனைவரும் எடுக்கின்ற முயற்சிகள் முதியவர்களின் நல்வாழ்விற்காகவும், மேம்பாட்டிற்காகவும் அமைந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அரசர்க்கெல்லாம் அரசரே எம் இறைவா, நாங்கள் வாழ்கின்ற இந்திய நாட்டையும், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தையும் ஆளுமைச் செய்யும் தலைவர்களையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம்.





கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்து பலன் தருவதுபோல எங்களுடைய ஆட்சியாளர்களும் தனக்கென்று சுயநலமாக வாழாமல் மற்றவர்களுக்காக வாழும் வரத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஒளியும் மீட்புமான இறைவா, எங்கள் குடும்ப வாழ்வின் வளர்ச்சிக்காக முழுமையாக பாடுபட்டு உழைத்துக் களைத்துப்போய் உள்ள எங்கள் பெற்றோர்களை நாங்கள் பேணி வளர்க்காமல் எத்தனையோ முறை அவர்களை அவமதித்துக் கொடுமைப்படுத்தியுள்ளோம். அனாதை இல்லங்களில் அவர்களைச் சேர்த்து எங்கள் உறவைத் துண்டித்துள்ளோம். இந்த தவறுக்காக எங்களை மன்னிக்கவும், நாங்கள் எங்களை இழந்து எங்கள் பெற்றோர்களின் நல்வாழ்வுக்காக வாழவும் வேண்டிய அருளைத்தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. எம்மைப் படைத்தாளும் இறைவா, நீர் படைத்த படைப்பனைத்தும் நல்லது எனக் கண்ட அன்புத்தெய்வமே, நாங்கள் எங்களுடைய சுயநலத்திற்காக, உமது படைப்பு சிதைவடையக் காரணமாயிருந்து இயற்கையை அழித்து வருகிறோம். இத்தகைய தீயச் செயல்களை ஒவ்வொருவரும்விட்டுவிட்டு, உமதுபடைப்பனைத்தையும் அன்புசெய்து அரவணைத்துப் பாதுகாத்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 19.03.2018 தூய வளனார் (யோசேப்பு) பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

I. 2சாமு. 7: 4-5அ,12-14அ,16 II. உரோ.4: 13,16-18,22 மத். 1:16,18-21,24அ

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது வளனார் என அன்புடன் அழைக்கப்படும் தூய யோசேப்பு பெருவிழாவை கொண்டாடுகிறது. மரியாவின் கணவரும் திருஅவையின் பாதுகாவலருமான தூய யோசேப்பு பெத்லகேமைச் சேர்ந்த ஒரு தச்சர். யோசேப்பைப்பற்றி வெகு அரிதாகத்தான் நற்செய்தியிலே நாம் பார்க்க முடியும். குறிப்பாக "யோசேப்பு நேர்மையாளராக இருந்தார்" (மத் 1:19) என்னும் செய்தி அவருடைய வாழ்க்கையைச் சுருக்கமாக நம் கண்முன் கொணர்கிறது. "நேர்மையாளர்" என்னும் சொல்லுக்கு விவிலியத்தில் தனிப்பொருள் உண்டு. யார் கடவுளுக்கு அஞ்சி, அவருடைய வழிகளைப் பின்பற்றி நடக்கிறார்களோ அவர்கள் "நேர்மையாளர்" என அறியப்பட்டனர். யோசேப்பும் இத்தகைய நேர்மையாளர் வரிசையில் வருகிறார்.

இவரிடம் காணப்பட்ட முக்கிய பண்பு எது என்று சொன்னால் அது "பிறரை இகழ்ச்சிக்குள்ளாக்க விரும்பாத நேர்மையாளர்" என்பதே. அதன் அடையாளமாக நற்செய்தியில், "அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார்" என்று நாம் பார்க்கின்றோம். நேர்மையாளருக்கு உரிய சிறப்புக்களுள் ஒன்று

பிறரைப் பற்றி அவர் கொண்டிருக்கிற நல்லெண்ணம். நேர்மையாளர்களே பிறரையும் நேர்மையாளர் என ஏற்றுக்கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது. இயேசுவின் வளர்ப்பு தந்தையான தூய வளனாரின் திருவிழா தொடக்க காலத்தில் இருந்த தூய வளனாரை பலவற்றிற்கு பாதுகாவலராக திருஅவை ஏற்படுத்தி இருக்கிறது. இதிலிருந்து இவரின் சிறப்பை, திருஅவை அவருக்கு அளித்திருக்கிற மகுடத்தை நாம் புரிந்து கொள்ளலாம். நமது தேவைகளை நம்பிக்கையோடு, பொறுமையின் நேர்மையின் சிகரமான தூய வளனாரிடம் எடுத்துச் சொல்வோம் தனது பரிந்துரையின் மூலமாக இறைவனிடம் பேசி நமக்கு பெற்றுத்தர நம்மையே தகுதியாக்கிக் கொள்ளத் தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், திருஅவையின் பாதுகாவலரான தூய யோசேப்பைப் போல நற்குணமும் சரியான முடிவெடுக்கும் ஆற்றலையும் பெற்று இறைமக்களை நல்வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வு தரும் இறைவா, தூய யோசேப்பைக் குடும்பங்களுக்குப் பாதுகாவலராகத் தந்தமைக்கு உம்மைப் போற்றுகிறோம். அவரது நல்மாதிரியைப் பின்பற்றி நாங்களும், நேர்மையாளர்களாய் வாழவும், பிறர்மீது நல்லெண்ணத்தில் வளரவும் அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் பிறப்பிடமே எம் இறைவா, அனைத்திலும் சிறந்தது உம் அன்பே என்பதை அறியும் நாங்கள், உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. ஏழை, எளிய, ஆதரவற்ற, கைவிடப்பட்டோர், இன்னலுறுவோருக்கு உமது அன்பைப் பகிரும் தாராள மனதை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 25.03.2018 குருத்து ஞாயிறு — திருப்பலி

**முன்னுரை** — திருமதி. டிலைலா சேவியர்

I. எசா. 50: 4-7 II. பிலிப். 2: 6-11 மாற்கு 14: 1-15:47

அன்பான இறைமக்களே, இன்றைய ஞாயிறு "குருத்து ஞாயிறு எனவும், பாடுகளின் ஞாயிறு எனவும் அழைக்கப்படுகிறது. மாட்சி, பாடுகள் என்ற இரு முக்கியமான நிகழ்வுகள் ஒரே தளத்தில் பயணிக்கின்றன. குருத்தோலை மகிழ்ச்சியின் அடையாளம். பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் தாமே கூடாரப் பெருவிழாவில், ஓலை மற்றும் தளிர்களையும், இலைகளையும் கொண்டுவந்து ஆண்டவர் திருமுன் மகிழ்ந்திருக்குமாறு மக்களைப் பணிக்கிறார் (லேவி. 23:40). மக்கபேயர் காலத்தில் மீட்கப்பட்டு விழா கொண்டாடப்பட்ட நாளில் அவர்கள் கைகளில் குருத்தோலைகளை ஏந்தி





திருவிழாவை மகிழ்வோடு கொண்டாடினர் (2மக்.10: 6-8). இவ்வாறு குருத்தோலைப் பவனி நமக்கு இயேசுவின் மாட்சியை வெளிப்படுத்துகிறது. ஓசான்னாகீதம் வெற்றியின் முழக்கமாக அமைந்தாலும் ஆலயத்தை அடைந்தவுடன் நாம் இயேசுவின் பாடுகளைப்பற்றி தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

நம்மைப்போல மனித உருவில் வந்த இயேசு தனது கடவுள் தன்மையில் இவ்வலகை மீட்காமல் சாதாரண மனிதனாகத் தம் தந்தைக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்தி சிலுவை பலியை ஏற்கிறார். இதனால் இவரை விண்ணவரும் மண்ணவரும் இயேசு கிறிஸ்து ஆண்டவர் என அறிக்கையிடுவர் எனக்கூறி இயேசுவோடு வாழ இரண்டாம் வாசகம் வழியாக புனித பவுல் நம்மை அழைக்கிறார். இயேசு எருசலேமிற்குள் நுழைந்தபோது மிகப்பெரிய மக்கள் கூட்டம் அவரை வரவேற்கத் துடித்தது. அக்கூட்டத்தில் பரிசேயர்கள், திருவிழாவோடு வந்தவர்கள் அனைவரும் "ஓசான்னா, தாவீது அரசரின் மகன் வாழ்க" என்று கூக்குரலிட்டனர். ஓசான்னா புகழ்ச்சியானது "சிலுவையில் அறையும்" என மாறுவதை இயேசு அறிவார். மேலும் பனை ஓலை வாளாகவும், அரசு கீரிடம் முள்முடியாகவும், வழியில் விரிக்கப்பட்ட ஆடைகள் பெரிய வெள்ளியன்று வெறுமையாக்கப்படும் தன் உடலாகவும் மாறுவதை இயேசு அறிந்திருந்தார். இரண்டு மாபெரும் உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைக்க இயேசு இன்று எருசலேமுக்குள் நுழைகிறார். முதன்மையாக கடவுள் இந்த உலகத்தை எவ்வளவு நேசிக்கிறார் என்பதைத் தம் மரணத்தின் வழியாக இவ்வுலகிற்குப் போதிக்க விரும்பினார்.

இரண்டாவதாக, "தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியாது" (லூக். 23:21) என்ற வார்த்தைகள் வழியாக-யூதாஸ் தன்னைக் காட்டிக்கொடுக்கப் போவதும், பேதுரு தன்னை மறுதலிக்கப்போவதும், சீடர்கள் தன்னைவிட்டு ஓடிப்போவர் என்பதும் தெரிந்திருந்தும் இயேசு அவர்கள்மேல் கொண்டுள்ள அளவிடமுடியாத அன்பை வெளிப்படுத்துகிறது. நமது மீட்பின் பெரு நிகழ்ச்சிகள் நிறைவேறிய புனித வாரத்தை இன்று நாம் துவங்குகின்றோம். இன்றைய இறைவார்த்தைகளும், கல்வாரி காட்சிகளும் இயேசுவின் பொறுமை, அன்பு, கீழ்ப்படிதல், தாழ்ச்சி போன்றவைகளை நமக்குக் கற்பிக்கின்றன. ஆண்டவர் இயேசுவின் பாடுகளில் பங்கேற்று இன்றைய ஆரவாரத்திற்குள் மறைந்திருக்கும் அர்த்தத்தைக் கண்டுணர்ந்து நமது ஆன்மீக வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்ற திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல தந்தையே இறைவா, திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திருச்சபையின் மக்களை நல்வழியில் நடத்திட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, நாட்டிலும், சமுதாயத்திலும், குடும்பங்களிலும் இன்றைய நாட்களில் ஏற்பட்டுள்ள பிளவுகள், மனவருத்தங்கள், பிரிவினைகள் இவைகளை நீக்கி அன்பு, பாசம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை எல்லாச் சூழ்நிலைகளிலும் அயலாரை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் போன்ற பண்புகளைக் கொண்டு வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பே உருவான இறைவா, புனித வாரத்தைத் தொடங்கும் நாங்கள் உம்முடைய பாடுகள், சிலுவை மரணம் வெறும் நிகழ்வுகளாக இல்லாமல் இவைகளை உள்வாங்கி மனம் வருந்தி, மனந்திரும்ப எளிமையான உள்ளத்தைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. மன்னிக்கும் மன்னவனே இறைவா, இந்த தவக்காலத்தில் எங்களால் முடிந்தவரை உமது சிலுவைப் பயணத்தைத் தியானிக்கவும், ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று பாவங்களுக்காகப் பரிகாரம் செய்யவும் இந்த தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக்க செயல்படுத்த வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 29.03.2018 பெரிய வியாழன் திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. வி.ப.12:1-8,11-14 II. 1கொரி.11:23-26 யோவா: 13: 1-15

மீட்பர் இயேசுவில் பேரன்பிற்குரிய சகோதர சகோதரிகளே, திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டுக் குறிப்பின்படி, இன்று நம் தாயாம் திருச்சபை ஆண்டவருடைய திருப்பாடுகளின் பெரிய வியாழனைக் கொண்டாட நம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது. இறைமகன் இயேசுவும் தமது தந்தையின் விருப்பத்தின்படி மனித வடிவெடுத்து, தம் எளிய வாழ்வு, புரட்சிமிகு போதனைகள், மற்றும் அரும் அடையாளங்கள் வழியாக இறையாட்சியை முழக்கமிட்டு அறிவித்தார். அதனாலேயே ஆட்சியாளர்களின் அதிருப்திக்கும், ஏளனத்திற்கும், ஏன் கண்டனத்திற்குமே உள்ளானார். தலைமைப் பொறுப்பு என்பது பணி செய்யப்பெற்றிருக்கும் வாய்ப்பு. இது விதிகளை மீறி விருப்பப்படி பதவிகளையோ, செல்வத்தையோ பகிர்ந்து கொள்வதற்கான அதிகாரமன்று. மாறாக, எல்லாரும் நம்மவரே. நம்மவருக்கு நம்மால் இயன்ற நல்லதைச் செய்வோம் என உறுதியாகத் தீர்மானம் செய்து கொண்டு உழைப்பதற்கு விடப்பட்டுள்ள அறைகூவல். அன்னையாம் திருச்சபை இன்றைய திருவழிபாடானது

*இறைவாக்கு வழிபாடு, காலடி கழுவும் சடங்கு, நற்கருணை வழிபாடு, நற்கருணைப் பவனி என நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.*

குருத்துவ அருட்சாதனத்தை ஏற்படுத்தியது, அன்புக் கட்டளையை நிறுவியது நற்கருணையை ஏற்படுத்தியது ஆகிய மாண்புமிக்க மறை உண்மைகளும் இன்றைய நாளில் நினைவு கூறப்படவுள்ளன. இத்தகு சிறப்பு வாய்ந்த இந்த மாலைத் திருப்பலி கொண்டாட்டத்தில் ஏற்ற முறையில் பங்கேற்று இறையருளைப் பெற இத்திருப்பலியில் வேண்டுவோம்.





**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தலைமைக் குருவான இயேசுவே, தாயாம் திருச்சபையை அன்பின் வழியில் வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், அனைவரும் இறையன்பின் ஆழத்தையும் மன்னிப்பின் மாண்பையும், மனம்மாறி நம்பிக்கையின் உண்மை வாழ்வையும் பிறரன்பையும் மக்களுக்கு எடுத்துக்காட்டும் கருவிகளாக வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. நற்கருணை நாதரே இறைவா, அருட்சாதனங்களின் மையமாக விளங்குவது நற்கருணை, அதுவே ஆண்டவரது உடனிருப்பின் அடையாளமாகும். நற்கருணை, குருத்துவம் என்ற அருட்சாதனங்கள் போற்றப்படவும், குருக்களின் வாழ்வும் பணியும் சிறந்தோங்க வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் இறைவா, உமது அன்புக்கட்டளையை கொடுத்து அதன்படி வாழ அழைக்கின்றீர். பிறரை மன்னித்து, நாங்களும் மன்னிப்பு பெற்று வாழும் தாராள உள்ளத்தைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 30.02.2018 இளையோருக்கான சிலுவைப் பாதை - பாதச் சுவடுகள்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

**சுவடுகளைத் தொடும்முன்...**

இது முடிவன்று, ஆரம்பம். ஆம் இயேசுவின் இறுதிக்காலம் முடிவன்று, உலக மீட்பின் தொடக்கமாகும். அவரின் சிலுவைப் பயணம் என்பது, துக்கப்பட்டுவிட்டு முடித்துவிடுவதற்கன்று. அந்த துயரம் நம் நெஞ்சில் உரமூட்ட வேண்டும். வீரத்திற்கு வித்திடும் வீரிய விதைகளாக இருக்க வேண்டும். வாழ்வில் புரட்சிப் பாதைகளைக் காட்டிய வரலாற்று நாயகனின் வாழ்வுப் பாதை, சிலுவை மரணத்துடன் முடிந்து விடுவதாகத் தோன்றலாம். ஆனால் இறந்த அவர் உயிர்த்து நம்மில் அந்த பயணத்தைத் தொடர்கின்றார். இளநெஞ்சங்களே, அழைக்கின்றார் பயணத்தைத் தொடர...

இளைஞர்கள் திருச்சபை மற்றும் சமூக மாற்றத்தை இளைஞர்களால் மட்டுமே கொண்டுவர முடியும் என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. "இளைஞர்களே, நீங்கள் எதிர்காலத் திருச்சபையின் செல்வங்கள் அல்லர். மாறாக, இன்றைய திருச்சபையின் செல்வங்கள்" என்கிறார் திருத்தந்தை 16ஆம் ஆசிர்வாதப்பர். இன்றைய கணினி உலகில், மனிதர்களை அப்புறப்படுத்தி இயந்திரங்கள் ஆக்கிரமித்துள்ளன. ஒரிசா, குஜராத், மற்றும் பல மாநிலங்களில் சமயத்தின் பெயரால் வெறியாட்டச் செயல்கள். மனிதர்கள் அன்பு செய்யப்படுவதற்குப் பதில், மனிதர்கள் பயன்படுத்தப்பட்டு, அதுவும் இளைஞர்கள் பயன்படுத்தப்பட்டு அழிக்கப்படுகிறார்கள். நுகர்வு வெறி, பெருகிவரும் தீவிரவாதம், வேலையில்லாத் திண்டாட்டம், பாலியல் பலாத்காரம் என சிலந்தி வலையில் சிக்கித் தவிக்கிறார்கள். இவர்கள் நேற்றைய வரலாறுகளிலும், இன்றைய

நிகழ்வுகளிலும், நாளைய ஆதங்கங்களிலும் சமூகத்தின் அடிநாதமாய், ஆணிவேராய், மைய நீரோட்டமாய் பதிவு செய்யப்பட வேண்டும். இப்படி நாளைய இந்தியாவின் தூண்களாக எழுந்து நிற்க இருக்கும் இளையோர்களைத் தட்டியெழுப்ப இயேசுவின் "பாதச்சுவடுகள்" உதவும் என்ற நம்பிக்கையோடு... பின்பற்றுவோம், தடையம் பதிப்போம்.

## முதல் சுவடு: நீதியின் மௌனம்

"தீர ஆராயாமல் குற்றம் சுமத்தாதே, முதலில் சோதித்தறி" - சீராக் 11:7

"பிறரைக் குற்றவாளிகள் என தீர்ப்பிடாதீர்கள்" என்றவரையே, அன்று பிலாத்து குற்றவாளி எனத் தீர்ப்பிட்டான். நாற்காலி நழுவவிடக் கூடாதே என்பதற்காக பிலாத்து கை கழுவிய தீர்ப்பு. தவறான முடிவுகளால் தடம் புரண்ட தீர்ப்பு. நீதியின்மீது அநீதி வழங்கிய தீர்ப்பு. உண்மையின்மீது பொய்மை வழங்கிய தீர்ப்பு. திருச்சிலுவைப் பயணத்திற்குத் திசைக்காட்டிய தீர்ப்பு. பெற்றவர்களும், பெரியோர்களும் இளைஞர்களைக் கைக்கழுவி விடுகிறோம். இன்று நம் வீடுகளில், பள்ளிகளில், வீதிகளில், வேலை செய்யும் இடங்களில் நம்மில் எத்தனைப்பேர் வாய்க்கு வந்தபடி திருடன், முட்டாள், முரடன், அடங்காதவன், மக்கு, தரித்திரம் பிடித்தவன், அதிஷ்டமில்லாதவன் என்று இளைஞர்களுக்கு அநீதித் தீர்ப்புகளை வழங்குகிறோம். அவர்களின் எதிர்கால கனவுகளை, கற்பனைத் திறன்களை பாழாக்குகிறோம். நம் கடமையினைக் கைக் கழுவுகிறோம். சுத்தமான கைகளைக் கழுவும்போது கழுவிய நீரும் சுத்தமாகத்தான் இருக்கும். ஆம் அநீதமாக தீர்ப்பிடப்பட்ட இந்த இளைஞர்களும் நிரபராதிகளே. இளைஞனே, அன்று ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்த தச்சன்மகன் இயேசுவைப் போன்று, நீ நிரபராதி என்றாலும் ஊமையான சமூகம் உன்னைத் தண்டிக்கும், சோர்ந்துப்போகாதே.

இறைவா, அநீதிக்கு அடிபணியாமல் நீதிக்குத் தோள் கொடுக்கும் பலத்தையும், வரத்தையும் இவர்களுக்கு அருளும்.

## இரண்டாம் சுவடு: மரம் சுமையாகிறது

"ஒருவர் மற்றவர்களுடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்,
இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்" - கலா 6:12

பாரமான மரச்சிலுவையை, மனித மரங்கள் சுமத்துகின்றன. தனது சவப்பெட்டியைத் தானே சுமந்தவர் உண்டா? சுமந்தார். ஆம் தேவனாம் இயேசு சுமந்தார். சிலுவையை ஏற்றுக்கொண்ட சுமைதாங்கியாம் இயேசு நம் பாவச்சுமைகளைத் தயங்காது ஏற்றார், கல்வாரிப் பயணத்தைத் தொடர்ந்தார். ஆம், இளைஞன் நாட்டைக் காக்க, நாட்டின் நலனைக் காக்க, தன்னை இலக்காக்குகிறான். தனது தோள்களில் நாட்டின் பாதுகாப்பு எனும் சுமையைத் தாங்குகிறான் எல்லையில். மனித இனம் காக்க இரத்தத்தைத் தானமாக்குகிறான் இரத்ததானம் செய்து. பிறர் வேதனையின் சுமைதனைத் தன்னோடு பகிர்ந்து கொள்கின்றான். "நீயே உனக்கு ஒரு சுமை, இன்னொரு சுமை தேவைதானா?" என்றெண்ணாது,





பிறருக்காகச் சுமைகளைத் தாங்கும்போது, மனித நேயத்தை வாழ்ந்து காட்டும்போது, அச்சுமைகள் அவனுக்கு வேதனைத் தரா. நிச்சயம் சுகமாய் இருக்கும்.

இறைவா, சுமைகளுக்குமத்தியில்இளையோர்மீதுவலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் துன்பங்களை எதிர்க்கவும், நல்ல இலட்சியத்திற்காக துன்பங்களைத் தாங்கிக் கொள்ளவும், மனத்திடத்தினை இவர்களுக்கு அளித்தருளும்.

## மூன்றாம் சுவடு: விழுகிறார் - விழுதாகிறார்

"தடுக்கி விழும் யாவரையும் ஆண்டவர் தாங்குகின்றார்,
தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார்" - தி.பா. 45:14

குற்றமாய் எழுதப்பட்ட பலகையில் குதிரையின்மீது அமர்ந்து தாங்கி, குற்றம் சுமத்தப்பட்ட குவலய நாதனுக்கு முன்செல்ல, இரத்தம் கசிய இருண்ட கண்களுடன் தள்ளாடியே சிலுவையின் பாரம் தாளாதவராய் பின் சென்றார் உன்னத தேவன். அதோ இயேசுவோ நம் பாவத்தின் பாரச்சுமை தாங்காது புழுதியில் விழுகிறார். தாழ்த்தப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட சமுதாயத்தை தூக்கிவிட முயன்ற இயேசுவை இச்சமுதாயம் விழுத்தாட்டியது. இளைஞர்கள் எம்மாத்திரம்?

பெற்றோர்களை இழந்ததாலும் பெற்றோரின் பொறுப்பற்றத் தனத்தாலும், பெற்றோரின் புறக்கணிப்பாலும், வறுமையினாலும், இளைஞர்கள் பிழைப்பிற்காகத் தவறான வழிகளில் பணம் சம்பாதிக்கத் தள்ளப்படுகிறார்கள். போதைப்பொருள் விற்றல், கள்ள நோட்டு மாற்றல், திருடு, கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் எனும் பெருஞ்சுமைகளால் வாழ்வின் பாதையில் தடுமாறி விழுகிறார்கள். பலவீனத்தினால் தாவீதும் பேதுருவும், புனித அகுஸ்தினாரும் எப்படி விழுந்து எழுந்தார்களோ அதுபோன்றே இவர்களும் எழவேண்டும். ஆம் விழுந்தால் எழுவதுதான் வெற்றியின் இரகசியம்.

இறைவா, இந்த இளம் உள்ளங்களைக் கரம் பிடித்து வழிநடத்தும், அவர்கள் தடுமாறாமல் நடக்க துணையாக வாரும்.

## நான்காம் சுவடு: சந்திப்பு - தாயுடன்

"பிள்ளைகளே, உங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியுங்கள், ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது" - எபே. 6:11

காணாமல் போன இயேசுவைக் கண்டெடுத்தபின், இயேசு சூசையுடனும், மரியாளுடனும் நாசரேத்தை அடைந்து அவர்களுக்குப் பணிந்து நடந்தார், தச்சனாக உழைத்தார். அதோ கல்வாரியில் தாயும் சேயும் சந்திக்க இமைகள் நான்கும் இமைக்காமல் கண்ணீர் சிந்த, இதயங்கள் இரண்டும் இடம் மாறின. மகனின் துன்ப கோலம் கண்டு துயரம் அடைகிறாள். மரண வேளையிலே தன் தாயைப் பத்திரமாக அருளப்பரிடம் ஒப்படைக்கிறார் இயேசு.

ஆனால் இன்றோ பிள்ளைகள் சுயநலத்தோடு, வசதிகள் வாய்ப்புகள் வந்தபோதும் பெற்றோரைப் புறக்கணிக்கிறார்கள். பிள்ளைகளுக்காகத் தன்னைக் கரைத்துக் கொண்டவளை, பிள்ளையை உண்ண வைத்து தான் உண்ண உணவில்லாது இருந்தவளை, உறங்க வைத்து அருகில் அமர்ந்து கண்விழித்தவளை, முதுமைக் காரணம் காட்டி சுமை எனத் தூக்கி எறிகின்றான் பிள்ளை. முதியோர் இல்லங்கள் அவர்களுக்குத் தஞ்சமாகின்றன. தட்டிக் கொடுத்த தாயன்பு, எட்டி உதைக்கப்படுகிறது. இதுதான் இன்றைய இளைய சமுதாயம்.

இறைவா, உம்முடைய உன்னத தாயின்மூலம் இவர்கள்தாயின் முதிர்வயதில், அவர்களை அரவணைக்கும் பிள்ளைகளாக, அவர்கள் வாழ்வில் மகிழ்வின் உச்சத்தை அளிப்பவர்களாக மாற்றியருளும்.

## ஐந்தாம் சுவடு: உதவுகிறார் - ஊதாசீனப்படுத்தவில்லை

"உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" - மத் 7:12

தன் தசையைப் புறாவிற்குத் தந்தான் சிபி சக்கரவர்த்தி. முல்லைக்கொடிக்கு பாரி தேரினைத் தந்தான், மயிலுக்குப் போர்வைத் தந்தான் மாமன்னன் பேகன், இதோ இயேசுவின் இறுதிப்பயணத்தில் தோளினைத் தந்தான் சீமோன். இயேசுவுடனே உண்டு உறங்கி உலவி வந்த சீடர்களுக்கு கிடைக்காத பாக்கியம், மனுக்குலத்தின் சார்பாக இங்கு சீமோனுக்குக் கிடைக்கப்பெற்றது. ஆம், மனித வாழ்க்கை என்பது அடிமைப்படுத்தி அடக்கி ஆள்வதோ, அடங்கி வாழ்வதோ அன்று, ஒருவர் மற்றவருக்கு உதவி செய்து வாழ்வதே உண்மையான மனித வாழ்வு.

இளைஞனே, சமுதாயத்திற்கு உன் பங்களிப்பு என்ன? உங்கள் கண்களைக் கூர்மையாக்குங்கள் சமூகத் தீமைகளை இனம் காணுங்கள்.

- குழந்தைகள்மேல் சுமத்தப்படும் அடிமைக் கலாச்சாரத்திற்காக
- பாலியல் கொடுமைகள் மலிந்திருப்பதற்காக
- பண முதலைகளின் வியாபாரத்திற்கு ஆளாகின்ற சிறுவர், சிறுமிகளுக்காக
- பெற்றோர் இல்லாத அனாதைக் குழந்தைகளுக்காக
- பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்காக
- சீமோனைப் போல உங்களில் எத்தனைப்பேர் உதவிட முன்வருகிறீர்கள்

இறைவா, ஒவ்வொரு மனிதனும் உன் உடன்பிறப்பு எனும் உணர்வோடு தோள் கொடுத்து உதவிட உமதருளைத்தாரும்.

## ஆறாம் சுவடு: வீரமே - வெரோணிக்கா

"தளர்ந்து போன கைகளைத் திடப்படுத்துங்கள், தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள், உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி திடங்கொள்ளுங்கள்" - எசா 35: 3-4

இயேசுவின் கால்களைக் கண்ணீரால் கழுவி கூந்தலால் துடைத்து நறுமணத் தைலத்தால் பூசி முத்தமிட்ட மகதலா மரியாளைவிட, வெறியோடு சென்ற கொடும் வீரர்களை விலக்கிக் கொண்டு, துணிந்து வந்து





இயேசுவின் முகத்தைத் துடைத்த வெரோணிக்கா உயர்ந்து நிற்கின்றாள். அதோ மனித சாயலும், தெய்வச் சாயலும் கலந்த கருணைமுகம் கைத்துண்டில் பதிந்து போனது. தன்னைத்தேடி வருவோர் இதயத்தில் முகத்தைப் பதிக்கும் தேவன், கைத்துண்டிலே தன் முகம் பதிக்கிறார்.

புள்ளிமானாம் ஒரு பெண், தன்னந்தனியாய் புலியெனப் பாய்ந்து வரும்போது, இளைஞனே, உன்னையே நீ நம்ப மறுக்கிறாய், பயப்படுகிறாய், உனக்குள் இருக்கும் உன் தைரியத்தை நம்பு. உனக்குள் இருக்கும் உன் துணிவினை நம்பு. உனக்குள் இருக்கும் சவாலை நம்பு. உனக்குள் இருக்கும் இனம்புரியாத அச்சத்தினை போக்கு. போராட்ட குணம் கொள், எதிர்த்து நில், தோளை உயர்த்து.

இறைவா, உமது பாடுகளின் பாதையில் வீர மங்கை வெரோணிக்காவைப்போல சமூக கொடுமைகளில் சிக்கி இருப்போருக்கு உதவும் துணிச்சலை இவர்களுக்கு தந்தருளும். ஆமென்.

## ஏழாம் சுவடு: இடறல் - அது இரண்டாம் முறை

"நல்லவன் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பான். பொல்லார் துன்பம் வந்தவுடன் விழுந்துவிடுவர்" நீமொ.24:16

இலட்சிய வாதியாம் இயேசு வாழ்நாள் முழுவதும் பல தடைகளைச் சந்தித்தவர். மதக்குருக்களின் சடங்கு, சம்பிரதாயங்கள், அதிகார வர்க்கத்தின் அநியாயமான அடக்குமுறைகள், உணர்வுகள் மழுங்கிப் போன மனிதர்களின் கேலிசிரிப்பு, மனித நேயத்திற்காக ஏங்கும் கதறல்கள், இப்படி ஏராளமான காரியங்கள் அவரைச் சங்கடப்படுத்தின. இதோ சிலுவைப் பாதையில் மீண்டும் ஒருமுறை சந்தித்த உடல் வீழ்ச்சியும் அவரின் இலட்சியப் பயணத்தில் ஏற்பட்ட தடங்கல்களும் மிக உடனே எழுந்து தொடர்ந்து நடக்கிறார். அடக்கு முறையாளர்களின் ஆணவத்திற்கு ஆளாகி விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து பயணம் செய்கிறார்.

இளைஞனே, கல்வாரிப் பாதையில் கீழே விழுந்த இயேசுவைப்போல நீயும் வாழ்விலே மேடு பள்ளங்களைச் சந்திக்கிறாய். இன்ப துன்பங்களை எதிர்கொள்கிறாய். வெறுப்பு, கோபம், பழிவாங்கல், பொறாமை போன்ற சுமைகளைச் சுமந்துக் கொண்டு பாரத்தால் மனம் தடுமாறுகிறாய். மனம் தளர்ந்தவனாய் தடுமாறி கீழே விழுகிறாய். துன்பம், சோதனை, வீழ்ச்சி, தோல்வி... இவையெல்லாமே வாழ்வின் உள்ளடக்கங்கள். துன்பம் என்பது வாழ்வின் ஒரு அங்கம் என்ற மனப்பான்மையோடு வாழ்ந்திடு.

இறைவா, இலட்சியங்களுக்காக வாழும்போது, இழப்புக்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தினை எம் இளைஞர்களுக்கு அருளும்.

## எட்டாம் சுவடு: அழுகையில் - ஆறுதல்

"நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை" - யோவா 15:12

நமக்காக யாராவது அழமாட்டார்களா என்று ஏங்குவது மனித இயல்பு. துன்பத்தைக் கண்டு நம்மோடு சேர்ந்து யாராவது துயரப்பட மாட்டார்களா என்று எதிர்ப்பார்ப்பது இயற்கை. ஆனால் இங்கே தனக்காக, தன்னைப் பார்த்து அழும் பெண்களைப் பார்த்து, "எனக்காக அழ வேண்டாம். உங்களுக்காகவும் உங்களுடைய பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்கிறார் இயேசு. தம் துன்பத்திலும் அவர்களுக்கு ஆதரவு கூறுகிறார். ஆறுதல் என்பது ஊக்கப்படுத்துவது, உற்சாகப்படுத்துவது, உடனிருப்பது, நம்பிக்கையூட்டுவது.

இளைஞர்களே, இன்றைய சமுதாயத்தையும் நாளைய சமூகத்தின் நிலையையும் எண்ணிப்பாருங்கள். வாழும் சமூகத்தில் எத்தனையோ இலட்சியவாதிகளையும், திறமை மிக்கவர்களையும், நற் சிந்தனையாளர்களையும் தினம் தினம் காண்கின்றோம். அவர்களின் ஏழ்மை நிலைக்கண்டு ஊக்கப்படுத்திடும், ஊற்சாகப்படுத்திடும் நிலை உங்களில் மலர வேண்டும். சமூகத்தில் சரித்திரம் படைக்கத் துணை நிற்க வேண்டும்.

இறைவா, எல்லோரும் தங்கள் இலக்கினை அடைய வேறுபாடுகள் காணும் சாதி, மத, இன, மொழி போன்ற சங்கிலிகளை உடைத்தெறிந்து, விடுதலையாத்திரையில் இளையோரும் ஒரு பயணியாக மாற வரம் தாரும்.

## ஒன்பதாம் சுவடு: சறுக்கி விழுவது - சாதனை புரியவே

"மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்" - லூக் 3:8

தளர்ந்த உடல், பஞ்சடைந்த கண்கள், பசி, தாகம் இவற்றால் பாடுகளின் பயணத்தில் தடுமாற்றம். இடறி விழுகிறார். மண்ணை நிலைநிறுத்திய மானிட மகன், மண்ணின் மடியில் மீண்டும் விழுகிறார். சகிக்க இயலா நோயின் கொடுமையால் வீழ்ந்து கிடந்த நோயாளிகளைத் தொட்டு தூக்கியவர், ஆயக்காரர்கள், பாவிகள் என்று புறக்கணிக்கப்பட்ட, ஆதரவற்ற மக்களோடு பழகியவர், சந்தர்ப்பத்தினாலும், சமுதாய சூழலினாலும் சறுக்கி விழுந்து, விபச்சாரிகளாக்கப்பட்டு வாழ்க்கையை இழந்தவர்களுக்கு ஆதரவு அளித்தவர் தரையில் விழுந்தார். முதன் முறை விழுந்தார், எழுந்தார். இரண்டாம் முறை விழுந்தார் எழுந்தார், மூன்றாம் முறை எழமுடியாமல் வீழ்ந்தார். உருகிய மெழுகு மீண்டும் மீண்டும் உருகி உருபெறுவதுபோல் மீண்டும் எழுந்தார். மீட்பின் இலக்கையடைய எழுச்சியோடு எழுந்தார்.

இளைஞனே, வாய்ப்புகள், ஆளுமைத்திறன், உத்திகள், அறிவு, பலம், தேடல், எண்ணம், சிந்தனை, ஒருங்கிணைப்பு சக்தி, உழைக்கும் திறன், துடிப்பு, வேகம் இவ்வாறு திறமைகள் பல இருந்தும், மாயைகளிடமும்,





போலிகளிடமும் போய் வீழ்ந்து அழிகிறீர்களே. முயற்சியுங்கள், போராடுங்கள், மாறுதலைக் கருத்தரிக்க உழையுங்கள், எழுந்திடுங்கள், ஆம் வீழ்வது இயல்பு. எழுவது சிறப்பு.

இறைவா, மாயைகளிடமும், போலிகளிடமும் எம் இளைஞர்கள் வீழ்வதை உணரவும், வீழ்ந்தோரை விடாது எழுப்பவும், ஊக்குவிக்கவும் அருள்தாரும்.

## பத்தாம் சுவடு: புனிதம் - களையப்படுகிறது

"என் ஆடைகளைத் தங்களிடையே பங்கிட்டுக் கொள்கின்றனர், என் உடையின்மேல் சீட்டுப் போடுகின்றனர்" - தி.பா. 22:18

பறவைக்குப் பட்டுடையும், மலருக்கு மெல்லுடையும் தந்த இறைவன், இப்போது ஆடை களையப்பட்டு, அரை நிர்வாணமாய் நிறுத்தப்படுகிறார். உன் ஆடையைக் கேட்பானுக்கு உள்ளாடையையும் கொடு என்றவர், இங்கு தன்னாடை களையப்பட்டே நிற்கிறார். அவமானத்தால் நிரப்பப்படுகிறார். ஆடை...மானத்தின் அடையாளம். மனித மாண்பின் சின்னம், மனித அவமான உச்சமே நிர்வாணம்.

இளைஞனே, நீயும் ஆணவம், அகங்காரம், சுயநலம், பொறாமை, நயவஞ்சகம், கோபவெறி போன்ற ஆடைகளைக் களைந்தெறி. அன்பு, பிறரன்பு, நீதி, நேர்மை, போன்ற பட்டாடைகளை அணிந்துக்கொள். இயற்கைச் சூழலால், ஊழல் அரசியலால், பாகுபடுத்தி பிரித்தாளும் சாதித் "தீ"யால் நிர்வாணமாக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலை ஆடையாக அணிவித்து, மனித நேயத்தைப் போற்றுங்கள். இன்றைய சமுதாய அமைப்பு மனிதத்தின் இறுதியை மெல்ல மெல்ல தொட்டுக் கொண்டிருக்கும் சூழலில், ஆள்வோரின் நலன்கள் காக்கப்பட்டும், சாதாரண மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டும் நிர்வாணப்படுத்தப்படுவதை தடுத்திடு. அதற்காக உன்னைப் பண்படுத்திடு.

இறைவா, உரிமைகளை இழந்து மக்கள் தவிக்கும் நேரங்களில் உரிமைக் குரலாக இளையோரை மாற்றும்.

## பதினொன்றாம் சுவடு: ஆணிகளுக்கிடையில் நீதி

"தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை" - லூக். 22:34

இதோ, இயேசு சுமந்து வந்த சிலுவை, இனி அது அவரைச் சுமக்கத் தயாராகிவிட்டது. அவரை அவமானப்படுத்தி, முள்முடி சூட்டி, சிலுவையைச் சுமக்க வைத்த யூதர்கள், அவரது கைகளையும், கால்களையும் ஆணியால் அறைகிறார்கள். தொழுநோயாளியைத் தொட்டு குணமாக்கிய கைகள், பாவிகளுக்கு மன்னிப்பைத் தந்த கரங்கள், பாவிகளைத் தேடிச்சென்ற கால்கள், நோய் தீர்க்க ஓடி அலைந்த கால்கள் ஆணிகளால் அறையப்படுகின்றன. அதோ இயேசு வேதனைத் தாளாமல் துடிதுடிக்கும் காட்சி.

இளைஞனே, பிறரைத் துன்புறுத்தி இன்பம் காணும் கூட்டம், இன்னும் நம் சமூகத்தில் இருக்கிறது. விதவிதமான ஆணிகளால் அறையப்படும் நிகழ்வுகள் வீடுகளிலும், வீதிகளிலும் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. வலியவன் எளியவனைத் துன்புறுத்துதல் இங்கும் அங்கும் சாதாரணமாக நடைப்பெறுகிறது. நீ இவர்களை இனம் கண்டிடு. காயங்களை உருவாக்கும் மனிதர்க்கு மத்தியில் காயங்களுக்கு மருந்து போடுபவனாய் இரு.

இறைவா, அநீதியைக் கண்டு அடங்கிப்போகாமல், உண்மைக்கு உறமூட்டும் உள்ளத்தை இவ்விளைஞர்களுக்குத் தாரும்.

## பன்னிரெண்டாம் சுவடு: புது விடியலாகும் - சாவு

"உண்மையில் இம்மனிதன் கடவுளின மகன்" - மாற்கு 15:39

இயேசு திருச்சபையை இராயப்பரிடம் ஒப்படைத்தார். தம் திருஉடலை சிலுவைக்கு ஒப்படைத்தார். திருத்தாயைச் சீடரிடம் ஒப்படைத்தார். தம் ஆவியையோ தந்தையிடமே ஒப்படைத்தார். ஆம், கள்வர்கள் நடுவே கர்த்தரின் சிலுவை. வலுவிழந்து உடல் தொங்குகிறது, உயிர் மங்குகிறது. "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறி தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார். இயேசுவின் சாவு இலட்சிய சாவு. விண்ணையும் மண்ணையும் இணைத்த சாவு. பொது விடியலாம் மக்களின் மீட்பை அறிவித்த சாவு. பாவத்தை வென்ற சாவு.

இளைஞனே, உண்மைக்காக உயிர் விடுவதால் உண்மை வாழ்கிறது. அன்புக்காக உயிர் துறப்பதால் அன்பு வாழ்கிறது. நீதிக்காக துறக்கும் உயிரிலே நீதி பூக்கிறது. வாழ்வுக்காக உன்னை இழக்கும்போது வாழ்வு பிறக்கிறது. ஆம் கொடுக்கும்போது தான் நீ பெறுகிறாய். இழக்கும்போது தான் நீ வாழ்கிறாய். ஆம், நீ உள்ளத்தையும் கொடுத்து, உன்னையும் கொடுப்பவனாக தன்னலமற்ற தியாகமாக மாறு.

இறைவா, உறவுக்காக உயிர் கொடுத்தவரே, உமது வழி வாழும் வரம் தாரும். கல்நெஞ்சனையும் கரையவைக்கும் கனிவான செயல்கள் தாரும். நீதிக்காக உயிர் கொடுத்து நீதிமான்களைக் காத்திடவும் எம் இளையோருக்கு அருள்தாரும்.

## பதிமூன்றாம் சுவடு: பரமன் - தாயின் மடியில்

"சொல்லாலும் செயலாலும் உங்கள் பெற்றோரை மதியுங்கள். அப்போது உங்களுக்கு ஆண்டவரின் ஆசிர் கிடைக்கும்" - சீராக் 3:8

மாட்டுக் குடிலில் தன் மடியில் தாங்கிய இயேசுவை மரியா கல்வாரியில் தன்மடியில் தாங்குகிறார். உலகிற்கு உயிர்கொடுக்க வந்த மகன் உயிரற்ற சடலமானார். சுமப்பதில் மிகவும் கடினமான சுமை எது என்றால், எது நடக்கக்கூடாது என்று விரும்புகிறோமோ அது நமக்கு ஏற்படுவதுதான். குழந்தையைச் சுமக்கும் தாய்க்கும், இறந்துபோன தனது மகனைச் சுமக்கும் தாய்க்குமுள்ள வித்தியாசம் அளவிடமுடியாது. அந்த





வித்தியாசத்தை முற்றிலுமாக அனுபவிக்கிறார் அன்னை மரியாள். இறந்த மகனை மடியில் தாங்கி, இறைவனுக்கு அர்ப்பணிக்கிறார். அவரின் தியாகம் ஓர் நிறைந்த வாழ்வு.

இளைஞனே, தாய் தந்தையரை, முதியோர் இல்லங்களில் முடங்கச் செய்கிறாய். தாயை தாரத்திற்காக ஒதுக்கி, தனிக்குடித்தனம் அமைக்கின்றாய். அனைத்தையும் அனுபவித்த பின் கறிவேப்பிலை என அவசியமற்றவளாய் தூக்கி எறிகின்றாய். ஒளிதரும் மெழுகாய் கரைந்து, திரியாகத் திரித்து ஒளியாய் பறந்து, நிழலாக நின்று, ஏணியாக அமைந்து, ஏற்றி விட்டவர்களை ஏளனப்பொருளாய் வீதியில் வீசி எறிகின்றாய். அன்புக்கெதிராய் ஆதரவற்ற ஆணவச் செயல்களுக்கு ஊற்றாகிறாய். இத்தகைய பாதகச் செயலுக்காய் அவள் காலில் விழுந்து மன்னிப்பு கேள்.

இறைவா, பெற்று, வளர்த்து, வாழ்க்கையின் பாதையாய் உள்ள பெற்றோரைப் போற்றி வளர்க்கும் பிள்ளைகாக வாழவும் அவர்களை மகிழ்விக்கவும் வேண்டிய மனத்தை எம் இளைஞர்களுக்குத் தந்தருளும்.

## பதிநான்காம் சுவடு: அடக்கம் - அடக்கம் செய்யப்பட்டது

"எல்லாமே மனிதரின் ஆற்றலுக்கு உட்பட்டதில்லை, மனிதன் இறவாமை பெற்றவர் அல்லன்" - சீராக் 17:30

நமது வாழ்க்கையோ தொடக்கத்திற்கும் அடக்கத்திற்கும் இடைப்பட்டது. இதோ இயேசுவின் சிலுவைப் பயணத்தின் இறுதிக்கட்டம். உயிரில்லாத அவரின் உடல், அடுத்தவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டக் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது. கல்லறை என்பது வாழ்வின் சின்னமா? சாவின் சின்னமா? இயேசுவின் இறப்பிற்கு முன், கல்லறை சாவின் சின்னமாக இருந்தது. இறப்பிற்கு பின் கல்லறை அமைதியின் சின்னமாக மாறியது. ஆம், இயேசு சருகாக இறக்கவில்லை. கோதுமை மணியாக அல்லவா இறந்தார்? கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடிந்தால் தானே பலன் கொடுக்கும். இதை அவரே சொன்னார்.

இளைஞனே, புதைக்கப்படுவது உனது உணர்வுகளும், உரிமைகளும் அல்லாமல் அடிமைத்தனமாக இருக்கட்டும். புதைக்கப்படுவது உனது அன்பாக இல்லாமல் உனது அகந்தையாக இருக்கட்டும். புதைக்கப்படுவது நீதியாக இல்லாமல் அநீதியாக இருக்கட்டும். புதைக்கப்படுவது நன்மையாக இல்லாமல் தீமையாக இருக்கட்டும். நீ விதைக்கப்பட்டு விருட்சமாகி பலன் அளிப்பாய்.

இறைவா, பிறர்நலத்தில் தொடங்கி, தன்னலத்தில் அடங்கி, பொதுநலத்தினில் வாழ்வினைத் தொடர்ந்து, இறுதிவரை இவ்வுலக ஆசையைத் துறந்து மறுவுலக இன்பத்தை அடைய எம் இளைஞர்களுக்கு அருள்தாரும்.

01.04.2018 உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு இவை மூன்றும் சேர்ந்து வரலாறானது, இறை இயேசு ஒருவருக்கு மட்டும்தான். உலகில் தோன்றிய மனிதர்களில் இறை இயேசு ஒருவர்தான் தனது பாடுகள், மரணம், உயிர்ப்புப்பற்றிக் கூறியவர். உண்மையாகவே சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். இந்த உண்மையை வியந்து போற்றி உலகமே கொண்டாடி வருகிறது. ஆனால் நாம் அன்று போலவே இன்றும் மறைநூல் வாக்கைப் புரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். திருத்தூதர்கள், மகதலா மரியாவின் சான்றைக் கேட்டு நம்பினர். நாம் காணாமல் நம்பிக்கொண்டு பேறுபெற்றவர்களாய் வாழ்கிறோமா? இறை இயேசுவின் உயிர்ப்பு மேற்கூறியவர்களுக்குப் புதிய பார்வையும், புதிய நம்பிக்கையும், வல்லமையும் கொடுத்து இயங்க வைத்தது. நாமும் இப்படி இயங்க வேண்டும், இயங்குவதற்கு நமது வாழ்வில் இறை இயேசுவின் உயிர்ப்புக் கொண்டாட்டம், வழியும் ஒளியுமாக அமைய வேண்டும்.

உயிர்ப்புவிழாநம்மைத்தன்னலத்திலிருந்தும்தற்பெருமையிலிருந்தும் விடுவிக்க வேண்டும். தாம் சொன்னபடியே இயேசு உயிர்த்தெழுந்தார். நாமும் சொன்னபடி வாழவேண்டும், அறிய வேண்டும், அறிவிக்க வேண்டும். நம் உள்ளங்களில் அடைப்பட்டிருக்கும் அநேக கற்கள் அகற்றப்பட வேண்டும். உயிர்த்து வாழும் கிறிஸ்துவில் திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் முழுமையான நிறைவான மாற்றம் பெற வேண்டும். மாற்றம் பெற்று புதுவாழ்வு கொண்டவர்களாக நமது பங்கு, மறைவட்டம், மறைமாவட்டம், தமிழகம், உலகு எங்கும் வலம் வருவோம். வாழ்த்துக்களோடு இணைந்து கொண்டாடி மகிழ்ந்து இறைவனை வாழ்த்தி மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, உண்மைக்குச் சான்று பகிர இறை இயேசுவின் பணியை மேற்கொண்டிருக்கும் எங்கள் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவிகள் அனைவரும் தம் பணியில் சிறிதும் நழுவாமல் வாழ்ந்து நம்பிக்கையின் உண்மையை அறிவிப்பவர்களாக வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. ஆற்றலே உருவான எம் இறைவா, அன்று உம் திருமகனின் உயிர்ப்பைக் கண்டு, நம்பி செயலாற்றியவர்கள்போல நாங்களும் எங்கள் குடும்பங்களும் அதே நெறியில் தவறாது வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, உயிர்ப்பு விழா கொண்டாடும் இவ்வேளையில் அனைத்து மக்களுக்கும் நாங்கள் அனைவரும் ஒளியாக, வழியாக, தன்னம்பிக்கை அளிப்பவர்களாக, சான்று பகர்பவர்களாக வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.





4. ஈகை வள்ளலே இறைவா, புதுவாழ்வு கொண்டு நாங்கள் வாழ நீர் அனைத்தையும் வழங்கி எங்களை விடுதலையாக்கியதுபோல, நாங்களும் எங்களிடம் உள்ளவற்றை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

## யோசேப்பு வழிகாட்டும் நீதிமான்

திரு. லூயிஸ்

இறையன்பில் இனியோரே, இறைவனின் மீட்புத்திட்டத்தில் மீட்பராம் இயேசுவின் அருட்காவலாக, உற்றத்துணையாக, விளங்கியவர் தூய யோசேப்பு. திருவிவிலியம் அவரை "நீதிமான்" எனக் கோடிட்டுக் காட்டுகிறது. தூய யோசேப்பின் பண்பு நலன்கள், நீதிமானின் நெறிச்செரிந்த வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன. எவ்வாறெனில்...?

**தன்னடக்கம் - மிக்க தயாளன்**

தூய யோசேப்பு, தன்னடக்கம் மிக்க தயாளனாக நமக்குக் காட்டும் வழி இதோ. இல்லறம் நடத்தும் முன்னே கருவுற்ற மரியாவைக் காட்டிக் கொடுக்கத் துணியாமல், கன்னியத்துடன் அச்செய்தியைத் தனக்குள் அடக்கிவைத்து, தனக்கு மட்டுமே தெரிந்த அச்செய்தியைப் பகிரங்கப் படுத்த விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்ட யோசேப்பு ஒரு நல்ல பாடத்தை நமக்குக் கற்பிக்கின்றார். பிரச்சனை-குழப்பம் எதுவாயினும் அதை தம்பட்டமடித்து பெரிதாக்காமல், தன்னடக்கத்தோடு தீர்த்துக்கொள்ள வழிதேடும் தயாள குணத்தை அவரிடம் நாம் கற்றுக் கொள்வோம்.

**கண்ணியம் - மிக்க காவலன்**

தூய யோசேப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மரியாவையும், இயேசுவையும் எங்ஙனம் காத்து வந்தார் என்பதை நாம் திருவிவிலியத்தில் காண்கிறோம். பேறுகால மனைவியாகிய மரியாவை பேணிக்காப்பதாக இருக்கட்டும், குழந்தை இயேசுவையும், தாய் மரியாவையும் எகிப்துக்குக் கூட்டிச் சென்றதாகட்டும், நாசரேத்தில் நல்லதொரு குடும்பத் தலைவராக வாழ்ந்ததாகட்டும், யோசேப்பு கண்ணியம் மிக்க காவலனாகத் திகழ்ந்தார் என்றால் மிகையன்று. தனது குடும்பத்தைக் கண்ணும் கருத்துமாக பேணிக்காக்கும் ஒருவரே நீதிமானாக வாழ்ந்து காட்டவும் முடியும் என்பதற்கு தூய யோசேப்பு நல்ல உதாரணம். நம்மில் பலர் இறைப்பணி-பொதுநலப்பணி என முனைப்புடன் செயல்பட்டு, தமது குடும்பப் பணிகளைச் செய்யத் தவறுவதால், ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்க தூய யோசேப்பின் முன்மாதிரியைக் கற்றுக் கொள்வோம்.

**கடமைப்- பற்றுமிக்க சேவகன்**

தூய யோசேப்பு, தனது கடமைகளைப் பற்றுடன் செய்து முடித்த ஒரு சேவகனாய்த் திகழ்கின்றார். இதற்கு மிகச் சிறந்த ஓர் உதாரணம்.

பெத்லகேம் மாடடைக் குடில்... இயேசுவின் பிறப்புக்காக மாடடைக் குடிலில் இடம் கிடைத்தது. கொஞ்சம் சிந்திப்போம். ஒரு மாடடைக் குடிலை மனிதக் குழந்தை பிறக்கும் ஒரு பிரசவக் குடிலாக மாற்றிட எவ்வளவு சிரமமாக இருந்திருக்கும்?... ஆனால் தூய யோசேப்பு கடமைப்பற்றுடன் தன்னிகரில்லா மீட்பராம் இயேசுவைத், தரணி காணச் செய்திட உழைத்தார். அசுத்தங்களைச் சுத்தமாக்கி, தீவனத் தொட்டியைக் குழந்தைத் தொட்டிலாக்கி, புல்லணையை மெத்தையாக்கி, கடுங்குளிரில் கதகதப்பூட்டி, இருளை ஒளிமயமாக்கி, குழந்தை இயேசு பிறக்கும் வகையில் ஓர் கடமை வீரராக செயலாற்றிய யோசேப்பிடம் நாமும் நாடிச் செல்வோம். நமது உள்ளங்களும் மாடடைக் குடில்போன்று பாவ நாற்றங்களால் அசுத்தமாகி இருக்கலாம். தூய யோசேப்பின் துணையுடன், அதனைச் சுத்தமாக்கி இறைவன் பிறக்கும் இனிய இடமாக மாற்றிட முன்வருவோம். கடமையைச் செய்து கடவுளைக் காண்போம்.

**இறுதியாக**

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்றெல்லாம் முழங்கும் முரண்பாடுள்ள மனிதர்களிடம் பேச்சு மட்டுமே மிச்சம்... ஆனால் செயல்வீரரான யோசேப்பு, தன்னிலே இவற்றைச் செயல்படுத்தி சிறப்பான இடம் பெறுகிறார். இயேசுவை நெஞ்சிலே சுமந்து நெருக்கம் காட்டி, தோளில் சுமந்து தோழனாய் மாறி, முதுகில் சுமந்து முழுமையாய் வாழ்ந்த தூய யோசேப்பைப்போல நாமும் இயேசுவுக்கு நெருக்கமாய் வாழ்வோம். தூய யோசேப்பின்மீது முத்தமிட்ட இயேசுவின உதடுகள் நம்மை முத்தமிடவும், அவர்மீது பதிந்த இயேசுவின் பிஞ்சுப்பாதங்கள் நம்மில் பதியவும், அவரது கரம்பிடித்துச் சென்ற இயேசுவின் பிஞ்சுக்கரங்கள் நம்மையும் பற்றிக்கொள்ளவும் நாம் முன்வருவோம். நீதிமானாகிய தூய யோசேப்பு நம்மையும் நீதியின் பாதையில் நடத்துவார்.

## தூய வெள்ளி - நம்மைத் தூய்மையாக்கும் வெள்ளி

திரு. விக்டர்

இறைமகன் இயேசுவின் பெயரால் உங்களை வாழ்த்துகிறேன். இம்மாத இறுதியில் இயேசுவின் இறப்பு நிகழ்வுகளைத் தியானிக்க இருக்கின்றோம். இயேசு உண்மையிலேயே மரித்தாரா? திருவிவிலியத்தை அறியாத சிலர் நம்மிடம் கேட்கும் கேள்வி இது. மத்தேயு தாம் எழுதியுள்ள நற்செய்தியில் "இயேசு உரக்க சத்தமிட்டு கத்தி உயிர்விட்டார்" (மத்.27:50) என்று இயேசுவின் இறப்பைப் பதிவு செய்துள்ளார். இயேசுவின் இறப்பைப் பதிவு செய்த மாற்கு நற்செய்தியாளரோ "இயேசு உரக்கக் கத்தி உயிர் துறந்தார்" (மாற்கு 15:37) என்று கூறியுள்ளார். இதை லூக்கா தனது நற்செய்தியில் "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று உரத்தக் குரலில் கூறி உயிர் துறந்தார் (லூக்.23:44) என்று கூறி இயேசுவின் இறப்பைப் பதிவு செய்துள்ளார்.





யோவான் நற்செய்தியாளரோ சற்று வித்தியாசமாக "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறி தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார் (யோவா19:30) என்று கூறி தனது நற்செய்தியில் இயேசுவின் இறப்பைப் பதிவு செய்துள்ளார். திருவிவிலியம் கதைக் களஞ்சியமன்று, மாறாக வரலாறுகள் அடங்கிய உண்மை நிகழ்வுகளை உள்ளடக்கிய உன்னத களஞ்சியம். எனவே மேலே குறப்பிட்ட குறிப்புகளிலிருந்து இயேசு இறந்தது வரலாற்று உண்மைதான் என்பதை அறிய முடிகிறது. உரோமை வரலாற்று ஆசிரியர்களும் தாங்கள் பதிவு செய்துள்ள வரலாற்று நூல்களிலிருந்து இயேசு வாழ்ந்த காலத்தின் நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் இயேசுவின் மரணமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால்தான் இயேசுவின் மரணம் அநேகரை ஈர்த்திருக்கிறது. "நான் உயர்த்தப்பட்ட பின்பு எல்லோரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்" என்று இயேசு கூறியது இன்று நிறைவேறி வருகின்றது அந்த ஈர்ப்பு அநேகரை புனித வாழ்வுக்கு வழிநடத்தி வருகிறது.

**முதலாவது:** நாம் புனிதம் பெற வேண்டி இயேசு கடவுளுக்குரிய தன்னுடைய மாட்சிமையை இழந்தார். கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார் (பிலி.2:6-8). உலகின் துவக்கத்திலேயே கடவுளோடு இருந்தவர் கடவுளாகவே இருந்தவர் (யோவா 1: 1-3) மகிமையை ஆடையென அணிந்திருந்தவர் (திபா. 104:1) நாம் புனிதம் பெறவேண்டி தனது மகிமைகளையும் மாட்சியையும் இழந்தார்.

அவர் பிறந்தது ஒரு மாட்டுக் குடிலில் (லூக் 2:7). அவர் பிறந்த பொழுது அவருக்கு மஞ்சமில்லை, பஞ்சு மெத்தையில்லை, பளபளவென்று மின்னும் பட்டாடைகள் இல்லை. கிடைத்ததே மாடுகள் உணவு உண்ணும் தீவனத் தொட்டிதான். அவரை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க கைகளில் காணிக்கை இல்லை. அதனால்தான் மோயீசன் சட்டப்படி ஏழைகள் கொடுக்கும் ஒரு ஜோடி மாடப்புறாக்களைக் காணிக்கையாக்கினர் சூசைமரி (லேவி 12:8). தலை சாய்க்க இடமின்றி வாழ்ந்த அவர் மரித்ததோ பாவிகளுக்கும், தேசத் துரோகிகளுக்குமான கொடிய சிலுவை மரணம். அடக்கம் செய்யப்பட்டதோ அடுத்தவரின் கல்லறை. இத்தனை இழப்புகளையும் இயேசு ஏன் ஏற்றாரென்றால் நாம் புனித வாழ்வு பெறவேண்டியே. நாம் புனித வாழ்வடைய வேண்டி அவர் தனது மகிமையை இழந்தார்.

**இரண்டாவதாக:** இயேசுவைப் பற்றிக் கூறும்பொழுது பேதுரு தனது திருமுகத்தில் "உங்களை அழைத்தவர் தூய்மை உள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம்

தூய்மையுள்ளவர்களாய் இருங்கள்" (1பேது 1:15) என்று கூறுவதிலிருந்து இயேசு எத்தகைய தூய்மையுடைய பரிசுத்தர் என்று விளக்குகின்றார். மேலும் எபிரேயர் திருமுகத்தில் நம்முடைய தலைமை குருவாம் இயேசுவின் பண்புகளைக் குறிப்பிடும்பொழுது "இவர் தூயவர், கபடற்றவர், மாசற்றவர், பாவிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர், வானங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர் (எபி.7:26) என்று அவரது பரிசுத்த தன்மையை விவரித்துள்ளார். இத்தகைய பரிசுத்தர், "நம்முடைய மீறுதல்கள் நிமித்தம் அவர் காயப்பட்டார், நொறுக்கப்பட்டார், நம்முடைய அக்கிரமங்களை அவர் சுமந்தார் (எசா. 53:5,6). நமக்கு நிறைவாழ்வளிக்க, நமக்கு புனித வாழ்வு வழங்க அவர் தண்டிக்கப்பட்டவர். அவருடைய காயங்களால் நாம் புனிதரானோம். நம்மைக் கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இயேசு இந்த இழப்புகளையெல்லாம் ஏற்றுக்கொண்டார் (1பேதுரு 3:18). நம்மைப் புனிதர்கள் ஆக்குவதற்காக அவர் தனது புனிதத்தை, பரிசுத்தத்தை இழந்தார்.

**மூன்றாவதாக:** "இவரே என் அன்பார்ந்த மகன், இவரிடம் நான் பூரிப்பாய் உள்ளேன் (மத் 3:17) என்று கூறி பிதாவானவர் தனக்கும் மகன் இயேசுவுக்கும் உள்ள அன்புறவை வெளிப்படுத்தினார். இதை உறுதிப்படுத்தும் விதமாக "என்னைக் கண்டவர் என் தந்தையைக் கண்டார் (யோவா 14:9,10,11) என்று கூறிய இயேசு, "தந்தையே நாம் ஒன்றாய் இருப்பதுபோல" (யோவா 17:11) என்று உரைப்பதிலிருந்து இயேசுவும் பிதாவும் எந்தளவுக்கு ஒன்றாய் இருந்தார்கள் என்பது விளங்குகிறது. இப்படி தன்னுடைய பிதாவோடு ஒன்றித்திருந்தார். நம்மைப் புனிதராக்குவதற்காக இயேசு தனது பிதாவின் உறவையும் இழக்கத் துணிந்தார். அதனால் தான் நாம் புனிதரானோம்.

**நான்காவதாக:** "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை (லூக் 1:37) இயேசுவின் வல்லமையை நற்செய்தி நூல்களில் பல இடங்களில் பார்க்கின்றோம். கானாவூர் திருமணத்தில் தண்ணீரை உயர்ரக திராட்சை இரசமாக்கி தனது முதல் புதுமையை நிகழ்த்தினார் (யோவா.2:1-5) தொடர்ந்து அநேக புதுமைகளாலும், அருஞ்செயல்களாலும் தனது வல்லமையை வெளிப்படுத்தினார். இப்படி ஏராளமான அதிசயங்களைச் செய்து தனது வல்லமையை வெளிப்படுத்தின ஆண்டவர் இயேசு இதோ சிலுவையில் ஏதும் செய்ய இயலாதவர்போல எல்லா வல்லமைகளையும் இழந்தவராய் காணப்பட்டார். அங்கே இருந்த தலைவர்களும் ஆட்சியாளர்களும் படை வீரர்களும் கேலி செய்தும் நமக்காக நாம் புனித பெற வேண்டி தன்னுடைய வல்லமைகளையெல்லாம் தனக்காக பயன்படுத்தவில்லை.

**ஐந்தாவதாக:** நம்மைப் புனிதராக்கும்படி இயேசு தனது உயிரையே இழந்தார் (லூக். 23:46). நாம் புனிதராக வேண்டுமென்பதற்காக இயேசு மரித்தார். இயேசு தனது தந்தையிடம் "நான் செய்ய வேண்டுமென்று நீர்





நினைத்தையெல்லாம் நான் செய்து முடித்தேன்" (யோவா.17:4) என்று கூறி தனது பணி நிறைவைக்குறித்து அறிக்கை தாக்கல் செய்கின்றார். ஒன்றை இழந்தால்தான் மற்றொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். விதை தன்னை இழந்தால்தான் செடியாக, மரமாக முடியும். பணத்தை இழந்தால்தான் பொருட்களை வாங்க முடியும். உழைப்பை இழந்தால்தான் ஊதியம் பெறமுடியும். இயேசுவின் உயிரிழப்பு நமக்கு புனிதவாழ்வைப் பெற்றுத் தந்துள்ளது.

அவர் நமக்காகத் தனக்குள்ள யாவற்றையும் இழந்தார். நாம் அவருக்காக எதை இழக்கத் தயாராய் உள்ளோம்? இயேசுவின் இழப்புகள் வீணாய்ப் போகாதபடி அவைகள் நம்மை அவருக்கேற்ற புனிதராக நம்மை மாற்றட்டும்.

புனிதத்தைக் காப்போம், புனிதராய் வாழ்வோம்
புனிதனின் வழியை புவியினில் மலரச் செய்வோம்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

### ஆராதனை வழிபாட்டில் அமைதியில் செபிக்க கற்றுக்கொள்வோம்

ஆராதனை வழிபாட்டில் அமைதியில் வழிபடுவதன் முக்கியத்துவம் குறித்து சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செபிப்பதற்கும், இறைப்புகழ் பாடுவதற்கும், இறைவனைப் புகழ்வதற்கும் விசுவாசிகளுக்குக் கற்றுக்கொடுக்கும் நாம், இறைவனை வழிபட அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறோமா என்ற கேள்வியையும், அருட்பணியாளர்களுக்கு முன்வைத்தார். இறைவனை ஆராதிப்பது குறித்து அனைவருக்கும் கற்பிக்க வேண்டியது அருட்பணியாளர்களின் கடமை என்று கூறியுள்ளார்.

### கணினி உலகில் சிறார் பாதுகாப்பிற்கு அர்ப்பணம்

இன்றைய கணினி உலகில் சிறாரைப் பாதுகாப்பதற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்ற அழைப்பை அனைவரும் பெற்றுள்ளோம் என தன் டுவிட்டர் பக்கத்தில் விண்ணப்பித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். கணினி உலகின் இணையப் பக்கங்களைப் பயன்படுத்துவோரில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறார் என அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கும் வேளையில், இச்சிறார் தவறான பாதையில் வழிநடத்தப்படக் கூடாது என்பதை மனதில்கொண்டு, இவர்களின் பாதுகாப்பிற்கு நாம் உறுதி வழங்க வேண்டுமென பல வேளைகளில் அழைப்பு விடுத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் டுவிட்டர் பக்கத்திலும் அதனை முன்வைத்துள்ளார். ஐ.நா.வின் குழந்தைகள் நல அமைப்பான UNICEF விடுத்துள்ள அறிக்கையின்படி, ஒவ்வொரு நாளும் ஒரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் சிறார், புதிதாக இணையத்தைத் திறந்து, அதைப் பயன்படுத்த பழக்கப்படுத்திக் கொள்கின்றனர் என்று தெரிகிறது.

எருசலேமுக்கும், புனித பூமியின் ஏனைய புனித தலங்களுக்கும் வரும் திருப்பயணிகளின் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரித்து வருவதாக புனித பூமி கிறிஸ்தவ தகவல் மையம் தெரிவிக்கிறது. 2016ம் ஆண்டிலிருந்து திருப்பயணிகளின் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரித்து வருவதாகக் கூறும் இம்மையம், இவ்வாண்டு சனவரி மாதத்தில் 770 குழுக்கள் வழியாக 26,000 திருப்பயணிகள் புனித பூமிக்கு வந்துள்ளதாகக் கூறுகிறது.

இந்தியாவின் 170க்கும் மேற்பட்ட மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 200 ஆயர்கள், பெங்களூருவில், பிப்ரவரி 2முதல் 9வரை நடைபெற்ற, இந்திய ஆயர் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்திய ஆயர் பேரவையின் தலைவராக மும்பை பேராயர் கர்தினால் ஆசுவால்ட் கிரேசியஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் அடுத்த இரு ஆண்டுகளுக்குத் தலைவராக இருப்பார். இப்பேரவையின் இணைப் பொதுச் செயலராக, மும்பை உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி Jervis D'Souza அவர்களும், இந்திய காரித்தாஸ் அமைப்பின் தலைவரான எர்ணாகுளம் உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்பணி Paul Moonjely அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய ஆயர் பேரவையின் பொதுச் செயலராகப் பணியாற்றும் ஆயர் Theodore Mascarenhas அவர்கள் இந்த நியமனங்களை இந்திய ஆயர் பேரவை வலைத்தளத்தின் வழியே அறிவித்துள்ளார். CBCI எனப்படும் இந்திய ஆயர்கள் பேரவை, 174 மறைமாவட்டங்களையும், 204 ஆயர்களையும், 64 ஓய்வு பெற்ற ஆயர்களையும் கொண்டு உலகில் நான்காவது பெரிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையாக விளங்குகிறது.

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை மார்ச் 17ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)





## சுடர் வாசகர் போட்டி - 44 சரியான விடைகள்

1. "இயேசு கிறிஸ்துவே அனைத்துக்கும் நீரே ஆண்டவர். நான் உங்கள் மந்தையின் ஆடு. சாத்தானை ஜெயிக்க என்னை தகுதியுள்ளவராக்கும்"
2. மனந்திருந்தி நற்செய்தியை நம்புங்கள்"
3. லோத்து
4. சாத்ராக்கு, மேசாக்கு, ஆபெத்நெகோ
5. உணர்வு, அருகாமை, சீரான
6. அகில பாரத்ய வித்யார்த்தி பரிஷத் (ABVP)
7. எசாயா.9:2
8. திருமுழுக்கு வழியாக
9. அமைதியின் விதைகள் வளர்ந்து வரும் வேளையில், அவற்றைப் பேணிக்காத்து, நமது மாநகரங்களை அமைதியை உருவாக்கும் தொழிற் கூடங்களாக உருமாற்றுவோம்"
10. தூய பீட்டர் தமியான்
11. தூய அத்தனாசியார் கி.பி. 373
12. மத். 16:18
13. தூய பீட்டர் தமியான்
14. யூசேபியா பாலோமினா ஏனெஸ்
15. தூய ஆகத்தம்மாள்

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

1. சகோ. மேரி செசிலி, பள்ளிக்கொண்டா, வேலூர்
2. திருமதி. நவ இருதயமேரி, கொலப்பலூர்
3. யுவான் நிட்டிஸ், பாம்பன்

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

பாஸ்கா ஞாயிறு

பாஸ்கா காலம் 2ஆம் ஞாயிறு

கிறிஸ்து பிறப்பு முன்னறிவிப்பு பெருவிழா

புனித ஸ்தனிஸ்லாஸ்

பாஸ்கா காலம் 3ஆம் ஞாயிறு

கான்டர்பரி தூய ஆன்சல்ம் ஆயர்

பாஸ்கா காலம் 4ஆம் ஞாயிறு

தூய ஜார்ஜ் மறைசாட்சி

தூய மாற்கு நற்செய்தியாளர்

தூய லூயி தெ மரி மோன்ஃபோர்ட்

பாஸ்கா காலம் 5ஆம் ஞாயிறு

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

தூய தனிஸ்லாஸ் வாழ்வு தரும் பாடம்
தூய மாற்கு நற்செய்தி நமக்கு தரும் பாடம்
தூய மோன்போர்டின் இறைவாழ்வு
திருச்சபை செய்திகள்

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:..................................
முகவரி:................................
..........................................
..........................................
..........................................





## சுடர் வாசகர் போட்டி - 45

1. 8 மாத கர்ப்பினி பெண்ணாக சிறைக்குச் சென்ற புனிதையார்?
2. புத்தகம் விற்பனையாளர், புத்தகம் அச்சிடுபவர்களின் பாதுகாவலர் யார்?
3. "சாம்ராக்" என்றால் என்ன?
4. பனஓலை, இளந்தளிர்களைக் கொண்டு வருதல் பற்றி பழைய ஏற்பாட்டில் எங்கே குறிப்பிடப்படுகிறது?
5. புனித வாரத்தை துவங்குகின்ற நாள் எது?
6. "இளைஞர்களே நீங்கள் எதிர்கால திருச்சபையின் செல்வங்கள் அல்ல இன்றைய திருச்சபையின் செல்வங்கள்" கூறியது யார்?
7. ஆராதனையில் எப்படி வழிபட வேண்டும் என்று திருத்தந்தை சுட்டிக் காட்டுகிறார்?
8. "மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானம் மிக்கது" திருவிவிலியத்தில் எங்குள்ளது?
9. "விசுவாசத்தில் ஊன்றி நில்லுங்கள், ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்" என்று கூறி இறந்தவர் யார்?
10. உறங்கும் பொழுது இரண்டு முறை கடவுள் காட்சியளித்து அழைக்கப்பட்ட புனிதர் யார்?
11. "பிறரை இகழ்ச்சிக்குள்ளாக்க விரும்பாத நேர்மையாளர்" யார்?
12. குருத்தோலைகள் பெரிய வெள்ளியன்று எப்படி மாறுவதாக ஆசிரியர் கூறுகிறார்?
13. பெரிய வியாழனன்று திருவழிபாடு எத்தனை பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது?
14. தன்னடக்கம் மிக்க தயாளன், கண்ணியம் மிக்க காவலன், கடமைப் பற்றுமிக்க சேவகன் என்று ஆசிரியர் யாரை சுட்டிக்காட்டுகிறார்?
15. இந்திய ஆயர் பேரவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயர் யார்?

## மார்ச் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வி | | எரே.17: 5-10 | லூக். 16: 19-31 |
| 2 | வெ | | தொ.நூ. 37: 3-4,12-13அ. 17ஆ-28 | மத். 21: 33-43, 45-46 |
| 3 | ச | | மீக். 7:14-15,18-20 | லூக்.15:1-3,11-32 |
| 4 | ஞா | தவக்கால மூன்றாம் ஞாயிறு | I. விப. 20:1-17<br>II. 1கொரி. 1: 22-25 | யோவா. 2: 13-25 |
| 5 | தி | | 2அர. 5:1-15 | லூக். 4: 24-30 |
| 6 | செ | | தானி(இ)1: 2,11-19 | மத். 18: 21-35 |
| 7 | பு | புனித பெர்பேத்துவா-பெலிசித்தா | இச. 4:1,5-9 | மத். 5: 17-19 |
| 8 | வி | புனித இறையோவான் | எரே. 7: 23-28 | லூக். 11: 14-23 |
| 9 | வெ | உரோம் நகர் புனித பிரான்சிஸ்கா | ஓசே. 14: 1-9 | மாற்கு12: 28ஆ-34 |
| 10 | ச | | ஓசே. 6:1-6 | லூக். 18: 9 -14 |
| 11 | ஞா | தவக்கால் நான்காம் ஞாயிறு | I. குறி. 36: 14-16,19-23<br>II. எபே. 2: 4-10 | யோவா 3: 14-21 |
| 12 | தி | | எசா. 65: 17-21 | யோவா 4: 43-54 |
| 13 | செ | | எசே. 47: 1-9,12 | யோவா 5:1-3அ, 5-16 |
| 14 | பு | | எசா. 49: 8-15 | யோவா 5: 17-30 |
| 15 | வி | | விப. 32: 7-14 | யோவா 5: 31-47 |
| 16 | வெ | | சா.ஞா. 2:1ஆ,12-22 | யோவா 7:12,10, 25-30 |
| 17 | ச | புனித பேட்ரிக் | எரே. 11: 18-20 | யோவா 7: 40-53 |
| 18 | ஞா | தவக்கால் ஐந்தாம் ஞாயிறு | I. எரே. 31: 31-34<br>II. எபி. 5: 7-9 | யோவா 12: 20-33 |
| 19 | தி | புனித மரியாவின் கணவர் சூசையப்பர் பெருவிழா | I. 2சாமு. 7: 4-5அ,12-14அ,16<br>II. உரோ. 4: 13,16-18,22 | மத்.1:16,18-21,24அ |
| 20 | செ | | எண். 21: 4-9 | யோவா 8: 21-30 |
| 21 | பு | | தானி. 3: 14-20,24-25,28 | யோவா 8: 31-42 |
| 22 | வி | | தொ.நூ. 17: 3-9 | யோவா 8: 51-59 |
| 23 | வெ | | எரே. 20: 10-13 | மாற்கு 10: 31-42 |
| 24 | ச | | எசே. 37: 21-28 | யோவா 11: 45-57 |
| 25 | ஞா | குருத்து ஞாயிறு | I. எசா. 50: 4-7<br>II. பிலிப். 2: 6-11 | மாற்கு 14: 1-15:47 |
| 26 | தி | | எசா. 42: 1-7 | யோவா 12: 1-11 |
| 27 | செ | | எசா. 49:1-6 | யோவா13: 21-22,36-38 |
| 28 | பு | | எசா. 50: 14-9அ | மத். 26:14-25 |
| 29 | வி | பெரிய வியாழன் (மாலை முப்பெரும் நாட்கள் தொடக்கம் | I. வி.ப. 12: 1-8,11-14<br>II. 1கொரி.11: 23-26 | யோவா 13:1-15 |
| 30 | வெ | பெரிய வெள்ளி (ஒருசந்தி, சுத்தபோசனம்) | I. எசா. 52: 13-53:12<br>II. எபி. 4: 14-16;5:7-9 | யோவா18:1-19:42 |
| 31 | ச | பெரிய சனி (இரவு பாஸ்கா திருவிழிப்பு) | | |